# 28

# சுற்றாடலைப் பாதுகாப்போம்

ஆறாம் வகுப்பு மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றுக்காக மலைநாட்டிற்குச் சென்றிருந்தனர். அது ஓர் இனிய மாலை வேளை. நுவரெலியாவிலுள்ள பூங்கா ஒன்றுக்குள் நுழைந்தனர். பூங்காவைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தனர். ஓரிடத்தில் இஸ்லாம் பாட ஆசிரியரைச் சுற்றி வட்டமாக அமர்ந்தனர். அப்பொழுது ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே உரையாடல் இடம்பெற்றது.

**ஆசிரியர்**

பிள்ளைகளே! நாம் சுற்றுலாவைத் திட்டமிட்டபோது ‘சுற்றாடல் பற்றிக் கலந்துரையாடுவோம் எனச் சொல்லி இருந்தேன் அல்லவா?’ நீங்கள் இந்தச்



சுற்றுலாவில் பல பயனுள்ள விடயங்களை அறிந்து கொண்டிருப்பீர்கள். சுற்றுச் சூழலில் நீங்கள் அவதானித்த இயற்கைக் காட்சிகள், அதன் பயன்கள் அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் முதலியன பற்றிய உங்கள் கருத்துக்களை ஒருவர் பின் ஒருவராகக் கூறுங்கள் பார்க்கலாம்.

**மாணவர் 1**

நான் இந்தச் சுற்றாடலை எண்ணிப் பார்க்கிறேன். எவ்வளவு அழகான காட்சிகள். உயரமான மலைகள், உள்ளத்தை மகிழ்விக்கும் நீர்வீழ்ச்சிகள், பச்சைப் பசேலென்ற மரம், செடி, கொடிகள், பாடி மகிழும் பறவையினங்கள், சில்லென்ற குளிர்காற்று, வரிசையாகச் செல்லும் கால்நடைகள், கண்ணைக் கவரும் கட்டிடங்கள், பார்க்கப் பார்க்க ஆனந்தமாக இருக்கிறது. நான் இந்த இயற்கையை மனமாற விரும்புகிறேன்.

**ஆசிரியர்**

நன்றாகக் கூறினீர்கள். பிள்ளைகளே! இவைதான் எம்மைச் சூழவுள்ள சுற்றாடல். இவை அல்லாஹ் எமக்களித்த அருட்கொடைகள். மனிதனைப் படைப்பதற்கு முன்பே இவை பூமியில் படைக்கப்பட்டு விட்டன. அல்லாஹ் பூமியைப் படைத்து அதில் மலைகளை முளைகளாக ஆக்கி வைத்தான். அதன் பிறகுதான் பூமி தளம்பாது நிலை பெற்றது. அது மனிதனும் ஏனைய ஜீவராசிகளும் வாழப்பொருத்தமாக அமையப் பெற்றுள்ளது. சரி உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள்.

**மாணவர் 2**

எம்மைச் சூழவுள்ள சுற்றாடல் எமது வாழ்வை வளப்படுத்துகிறது. எமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள உதவுகிறது. ‘பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காகவே படைத்துள்ளோம்’ என அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதை நாம் அறிவோம். இயற்கை வளங்கள் எல்லாம் மனிதருக்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் காப்பது எமது கடமையாகும்.

**மாணவர் 3**

எனக்குக் கவலையாக இருக்கிறது. சூழல் பற்றிய போதிய விளக்கமின்மையால் காடழிப்பு, இரசாயனக்கழிவுகள், அளவுக்கதிகமான புகை போன்றவற்றால் இயற்கை வளங்கள் பாதிப்படைகின்றன. இதன் காரணமாக உலகில் உணவுப்பஞ்சம், நன்னீர் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற செய்தியை பத்திரிகையில் படித்தேன்.

***மாணவர் 4***

ஒரு முஸ்லிம் சூழலை மாசுபடுத்தக்கூடாது. 'ஈமானின் மிகத் தாழ்ந்த நிலை பாதையில் இடையூறானவற்றை அகற்றுவதாகும்' என நபி (ஸல்) அவர்கள் உபதேசித்துள்ளார்கள். தேவையின்றி மரங்களை வெட்டுவதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. பயிர் செய்து நன்மை பெறவும், மரம் நாட்டி சூழலை அழகுபடுத்தவும் இஸ்லாம் ஊக்குவிக்கிறது. நபி (ஸல்) அவர்கள் ஸல்மானுல் பாரிஸீ (ரழி) என்ற தோழரின் விடுதலைக்காக அவரது எஜமானனின் தோட்டத்தில் முன்னூறு பேரீத்த மரங்கள் நாட்டிய சம்பவத்தைக் கேள்விப்பட்டுள்ளேன்.

***ஆசிரியர்***

பிள்ளைகளே! நீங்கள் தெரிவித்த விடயங்கள் அனைத்தும் உண்மை தான். இது அல்லாஹ் படைத்த உலகம். இவவுலகில் இருப்பவை எல்லாம் அவனுக்கே சொந்தம். அவை பூமியின் அழகுக்காகவும், பாதுகாப்புக்காகவும், மனிதனின் வாழ்வாதாரத்திற்காகவும் படைக்கப்பட்டுள்ளன. இந்தப் பௌதி கச் சூழலைப் பாதுகாப்பது எமது கடமையும் பொறுப்புமாகும். இது பற்றி நீ ங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

***மாணவர் 5***

மனிதனால் மாசடையும் வளியானது, தாவரங்களால் தூய்மையாக்கப்படுகிறது. நீர் நிலைகள், மைதானம், பழமரங்கள் உள்ள இடங்களில் மலசலம் கழித்து அவற்றை அசுத்தப்படுத்தக் கூடாது. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதன் மூலம் எமது சிந்தனை சீரடையும். சுகாதாரம் பேணப்படும். வளங்கள் பெருகும். வாழ்க்கை வளம் பெறும்.

***மாணவர் 6***

மண்ணை வளப்படுத்துவதிலும் தாவர உற்பத்திகளிலும் மண்புழு, பூச்சி கள் உதவுகின்றன. ஆதலால் முழு சுற்றாடலையும் பேணிப் பாதுகாப்பது அறிவுள்ள மனிதனின் கடமையாகும். 'உங்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகள் பற்றி மறுமை நாளில் நிச்சயமாக விசாரிக்கப்படுவீர்கள் (102:8) என அல் குர்ஆன் எச்சரிக்கின்றது. உலகை வெறுத்து ஒதுக்குமாறு இஸ்லாம் போதிக்கவில்லை. மறுமை வாழ்வை மறக்காமல், இயற்கை வளங்களைப் பயன்படுத்த வேண்டும். அதனைப் பாதுகாக்கவும் வேண்டும்.

வருங்கால சந்ததிகளுக்காக வளமான பூமியை விட்டுச் செல்ல வேண்டும். இது நம் அனைவரினதும் கடமையாகும்.

**ஆசிரியர்**

பிள்ளைகளே! நீங்கள் நல்ல பல கருத்துக்களைக் கூறினீர்கள். நீங்கள் சிறந்த அவதானம் உள்ளவர்கள். நல்ல பல தகவல்களைத் திரட்டியுள்ளீர்கள். சுற்றாடலிலுள்ள வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் அருட்கொடைகளாகும். அவை உயிரினங்களின் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானவை. அவற்றை மாசுபடுத்தாது, பாதுகாத்து பயனுள்ளதாக்குவோம். சுற்றாடலை நேசித்து வாழ்வோம்.

## பயிற்சி

சுருக்கமான விடை தருக

1. சுற்றாடல் என்றால் என்ன?
2. சுற்றாடலில் காணப்படும் இயற்கை வழங்கள் மூன்றினைத் தருக.
3. மலைகள் படைக்கப்பட்டதற்கான காரணம் யாது?
4. சூழலை மாசு படுத்தும் காரணிகள் இரண்டைத் தருக.
5. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.
6. இயற்கை வளங்கள் யாருடைய அருட்கொடைகள்?
7. பாடத்தில் இடம் பெற்ற அல்குர்ஆன் வசனத்தை தருக.
8. சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றிச் சுருக்கமான விளக்கம் தருக.